Registered as a Newspaper பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 19 [05-10-1993] செவ்வாய்க்கிழமை ஓசை 229

## யாழ். வன்னி தொடர்பு சேவை தகவற் பரிமாற்றத்திற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணத்திற்கும் வன்னிக்குமிடையே தற்போது போக்குவரத்துச் சீரின்மை காரணமாக ஏற்பட்டுள்ள தகவற் பரிமாற்றத்தை, தடங்கல்களைக் கருத்திற்கொண்டு யாழ். நகரிற்கும் கிளிநொச்சிக்கும் இடையேயான தொடர்புச் சேவை நடைபெற்று வருகின்றது. இச் சேவைக்கான செயலகங்கள் அருச்சுனா வீதியில் உள்ள ஆரியகுளம் சந்திக்கு அண்மையிலும் கிளிநொச்சியில் பழைய பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு அண்மையிலும் உள்ள கட்டடத்திலும் மேலும் தகவல் கையேற்கும் கருமபீடம் ஓமந்தை சோதனை நிலையத்திலும் இயங்கி வருகின்றது. செயலகங்கள் காலை 9.00 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணிவரையும், மாலை 1.30 தொடக்கம் 5.00மணி வரையும் இயங்கும். வாரத்தில் ஏழு நாட்களும் மேற் குறிப்பிட்ட நேர ஒழுங்குப்படி கருமபீடங்கள் இயங்கும். தொடர்புத் தகவல்களைக் [4ஆம் பக்கம் பார்க்க]

# ‘யாழ்தேவி’ இராணுவ நடவடிக்கை தோல்வி;

# கிளாலியிலிருந்து படைகள் பின்வாங்கின

## புலிகள் தாக்கலாமென அச்சம்

(கிளாலி)

**கிளாலிப் பகுதியில் இருந்து நேற்றுக்காலை சிறிலங்கா இராணுவம் பின்வாங்கியது. கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்ட ஒபரேசன் யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின்போது பாரிய இழப்புக்களைச் சந்தித்த இராணுவம், நான்கு தினங்களின்பின் கிளாலி வந்தடைந்தது. இருப்பினும், விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் பெரிய அளவில் இடம்பெறலாம் என அஞ்சிய இராணுவத்தினர் நேற்று நண்பகலுக்கு முன்னதாக கிளாலியில் இருந்து பின்வாங்கிச் சென்றுள்ளனர்.**

25 நாட்கள் கொண்ட தாக்குதல் திட்டத்துடன் கடந்த செவ்வாய்க்கிழமை ஒப்பரேசன் யாழ்தேவி அமைக்கப்பட்டது. ஆனால் இராணுவ நடவடிக்கை ஆரம்பித்த இரண்டாவது நாள் புலோப்பளைப் பகுதியில் ஏற்பட்ட கடும் சமரில் சிறிலங்கா இராணுவம் பாரிய இழப்புக்களைச் சந்தித்தது. இம் மோதலில், சுமார் 150 இராணுவத்தினர் கொல்லப்பட்டதோடு, 250க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். இரண்டு டாங்கிகளையும் கவச வாகனங்களையும் இராணுவம் இழந்தது.

இதனைத் தொடர்ந்து இராணுவத்தினரின் முன்னேறும் முயற்சிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டன. இருப்பினும் இரு தினங்களின் பின் இராணுவம் கிளாலிப் பகுதி வரை வந்தது. இங்கும் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி இரு வாகனங்களையும் ஐந்து படையினரையும் இராணுவம் இழந்தது.

இதேவேளை கிளாலிப் பகுதியில் தொடர்ந்தும் நிலைகொண்டு இருந்தால் புலிகளின் பாரிய தாக்குதல்களுக்கு இலக்காகக் கூடும் என இராணுவ வட்டாரங்களில் அச்சம் தெரிவிக்கப்பட்டது. மேலும் புலோப்பளை தோல்வியுடனேயே இராணுவம் தாக்குதல் திட்டத்தைக் கைவிடுவது தொடர்பாக அரசாங்க உயர்மட்டத்தினருடன் பாதுகாப்பு பிரிவினர் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதை அடுத்தே இராணுவம் கிளாலியை விட்டு பின்வாங்கியுள்ளது.

## கைவிடப்பட்ட நிலையில் இராணுவ டாங்கிகள்

புலோப்பளை - அல்லிப்பளை பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரின் கனரக வாகனங்களின் சிதறிய பாகங்கள்பல காணப்படுகின்றன.

அண்மையில் ஆனையிறவுப் பகுதியிலிருந்து கிளாலி நோக்கி டாங்கிகள் சகிதம் முன்னேறிய படையினரை புலோப்பளை அல்லிப்பளைப் பகுதியில் வைத்து இடைமறி

களும் பல பாகங்களாகச் சிதறிக் காணப்படுவதுடன் பாரிய குழி ஒன்றும் ஏற்பட்டுள்ளதுடன் அதற்குள் நீர் நிரம்பி (4ஆம் பக்கம் பார்க்க)

## இடுகாடுபோல் காட்சிதரும் கிளாலி இறங்குதுறை



புலோப்பளை சமரில் சிதறிய டாங்கி

# இராணுவம் எதிர்பார்த்ததை விட களத்தில் பேரிழப்பை சந்தித்தது!

25 நாட்கள் கொண்ட தாக்குதல் திட்டத்துடன் கடந்த செவ்வாய்க்கிழமை ஒப்பரேசன் யாழ்தேவி அமைக்கப்பட்டது. ஆனால் இராணுவ நடவடிக்கை ஆரம்பித்த இரண்டாவது நாள் புலோப்பளைட பகுதியில் ஏற்பட்ட கடும் சமரில் சிறிலங்கா இராணுவம் பாரிய இழப்புக்களைச் சந்தித்தது. இம் மோதலில், சுமார் 150 இராணுவத்தினர் கொல்லப்பட்டதோடு, 250க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். இரண்டு டாங்கிகளையும் கவச வாகனங்களையும் இராணுவம் இழந்தது.

இதனைத் தொடர்ந்து இராணுவத்தினரின் முன்னேறும் முயற்சிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டன. இருப்பினும் இரு தினங்களின் பின் இராணுவம் கிளாலிப் பகுதி வரை வந்தது. இங்கும் விடுதலைப் புலிகளின் கண்ணி வெடியில் சிக்கி இரு வாகனங்களையும் ஐந்து படையினரையும் இராணுவம் இழந்தது.

இதேவேளை கிளாலிப் பகுதியில் தொடர்ந்தும் நிலை கொண்டு இருந்தால் புலிகளின் பாரிய தாக்குதல்களுக்கு இலக்காகக்கூடும் என இராணுவ வட்டாரங்களில் அச்சம் தெரிவிக்கப்பட்டது. மேலும் புலோப்பளை தோல்வியுடனேயே இராணுவம் தாக்குதல் திட்டத்தைக் கைவிடுவது தொடர்பாக அரசாங்க உயர்மட்டத்தினருடன் பாதுகாப்பு பிரிவினர் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதை அடுத்தே இராணுவம் கிளாலியை விட்டு பின் வாங்கியுள்ளது.

## கைவிடப்பட்ட நிலையில் இராணுவ டாங்கிகள்

புலோப்பளை - அல்லிப்பளை பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரின் கனரக வாகனங்களின் சிதறிய பாகங்கள்பல காணப்படுகின்றன.

அண்மையில் ஆனையிறவுப் பகுதியிலிருந்து கிளாலி நோக்கி டாங்கிகள் சகிதம் முன்னேறிய படையினரை புலோப்பளை அல்லிப்பளைப் பகுதியில் வைத்து இடைமறித்த விடுதலைப் புலிகள் உக்கிர தாக்குதலைமேற்கொண்டதுடன்இருடாங்கிகள்,இருகவச வாகனங்கள் ஆகியன கைப்பற்றப்பட்டு முற்றாகத் தாக்கி அழிக்கப்பட்டதும் நேற்று முன்தினம் பவள் மற்றும் ஜீப் வண்டி ஆகியன கண்ணிவெடி மூலம் சிதறடிக்கப்பட்டதும் தெரிந்ததே.

இவ்வாறு அல்லிப்பளைப் பகுதியில் வைத்து விடுதலைப் புலிகளால் தாக்கி முற்றாக அழிக்கப்பட்ட இரு டாங்கிகளும் பல பாகங்களாகச் சிதறிக் காணப்படுவதுடன் பாரிய குழி ஒன்றும் ஏற்பட்டுள்ளதுடன் அதற்குள் நீர் நிரம்பி

(4ஆம் பக்கம் பார்க்க)

## இடுகாடுபோல் காட்சிதரும் கிளாலி இறங்குதுறை

(நமது நிருபர்)

சிறிலங்கா இராணுவத்தினரின் நடவடிக்கைகளால் கிளாலி இறங்கு துறைப்பகுதி இடுகாடுபோல் காட்சியளிப்பதாக நேற்று மாலை அப் பகுதியை நேரில் பார்வையிட்ட எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

புலோப்பளை, அல்லிப்பளை, கிளாலி ஆகிய பகுதிகளை சில தினங்களாக முற்றுகையிட்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் அங்கு தங்கியிருந்த வேளைகளில் தாம் தங்கியிருந்த பகுதிகளில் இருந்த நூற்றுக்கணக்கான குடிசைகளையும், 10 வரையான கடைகளையும் தீயிட்டதுடன் கரையோரப் பகுதிகளில் தரித்து நின்ற இருநூறு வரையான பயணிகள் போக்குவரத்துப் படகுகளையும் எரித்து அழித்துள்ளனர். அத்துடன் வீடுகளுக்குள் வைக்கப்பட்டிருந்த சில வெளி இணைப்பு இயந்திரங்களும் வீட்டுடன்

[4ஆம் பக்கம் பார்க்க]



புலோப்பளை சமரில் சிதறிய டாங்கி

# இராணுவம் எதிர்பார்த்ததை விட களத்தில் பேரிழப்பை சந்தித்தது!

(கொழும்பு)

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் போது இராணுவத்தினர் கணிப்பீடு செய்து வைத்திருந்த இழப்புக்களை விட பலமடங்கு அதிகமான இழப்புகளை இராணுவத்தினர் சந்திக்க வேண்டியிருந்ததாக இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் கடந்த புதன் கிழமை முன்னேறியசிறிலங்கா இராணுவ அணிமீது விடுதலைப்புலிகள் நடாத்திய திடீர் தாக்குதலால் பல்லாயிரக் கணக்கான சிப்பாய்களைக் கொண்ட இராணுவ அணி குழப்பமடைந்து சின்னாபின்னமாகியது இதனால் படையணி அலங்கோல நிலைக்கு தள்ளப்பட்டது இதனால் படையினரில் சுமார் 250 பேர் பெரும்பாதிப்புக்குள்ளாக்கப்பட்டனர். களத்துக்கு செல்ல முன்னர் தாம் கணிப்பீடு செய்து கொண்ட பாதிப்பிலும் விட அதிகமான இழப்புக்களைச் சந்திக்க வேண்டியிருந்தது என்று களத்தில் நின்று யுத்தம் புரிந்த படை அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி இச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இந்த யுத்தநடவடிக்கையின் போது மிகவும் திறமையாகச் செயற்பட்ட கேணல் சரத் பொன்சேகாவுக்கு நெஞ்சுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் பீரங்கிக் குண்டினால் ஏற்பட்ட காயம் களத்தில் நின்ற படையினருக்குப்பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்

[4ஆம் பக்கம் பார்க்க]

## சண்டே ரைம்ஸ் தகவல்

## கேணல் படுகாயம்

[கொழும்பு]

புலோப்பளையில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் காயமடைந்த கேணல் சரத் பொன்சேகா கொழும்பு வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இயக்கச்சியிலிருந்துஇராணுவச் சிப்பாய்களை நகர்த்தும் தந்திரோபாயத்தில் ஈடுபட்டிருந்த இவர் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் படுகாயமடைந்தார் என்று கொழும்பு செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

## ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் இன்று செவ்வாய் காலை 6.00 மணிமுதல் நீக்கப்படும் என பாதுகாப்பு செயற்பாட்டு தலைமையகம் நேற்று அறிவித்தது. மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் அமுலில் இருந்த ஊரடங்கு நேற்று பிற்பகல் 2.00 மணியுடன் நீக்கப்பட்டது.

## டாங்கிப் பிரிவின் கப்டனை காணவில்லை!

[கொழும்பு]

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின்போது ஆனையிறவு இராணுவ முகாமைச் சேர்ந்த கவசவாகன படைப் பிரிவைச் சேர்ந்த கப்டன் ஒருவரை விடுதலைப் புலிகள் கடத்திச் சென்றுவிட்டதாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கப்டன் பந்துல நாணயக்


[4ஆம் பக்கம் பார்க்க]

## புலேந்திரன், குமரப்பா உட்பட

# பன்னிரு வேங்கைகள் நினைவு இன்று தமிழீழமெங்கும் அனுஷ்டிப்பு

[யாழ்ப்பாணம்]

தமிழீழ தேசிய விடுதலைக்காக தீரமுடன் போராடிய லெப்டினன்ட் கேணல் புலேந்



லெப.கேணல புலேந்திரன்

திரன், லெப்டினன்ட் கேணல் குமரப்பா உட்பட பன்னிரு வேங்கைகளதும்ஆறாம்ஆண்டு நினைவு தினம் இன்று தமிழீழமெங்கும் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இன்றுகாலை 8.00 மணிக்கு சகல கோட்டங்களிலும் உள்ள பன்னிரு வேங்கையரின் தூபிகள், நினைவுருவப் படங்கள் நிறுவப்பட்டுள்ள இடங்களில் ஈகைச்சுடர்கள் ஏற்றியும், மாலைகள் அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தியும் 6ஆம் ஆண்டின் நினைவினையொட்டி அப்பன்னிரு வீரமற வேங்கைகளுக்கும் அஞ்சலி நிகழ்வுகள்நடைபெறவுள்ளன.

இந்திய இலங்கை அரசுகளின் கூட்டுச் சதிக்குப் பலியாகிய இப்பன்னிரு வேங்கைகளுக்கும் தமிழீழ மக்கள் இன்று தமது உணர்வு பூர்வமான அஞ்சலிகளைச் செலுத்துவார்கள். இன்றைய அஞ்சலிக்காக யாழ் குடாநாடு உட்பட தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேற்படி பன்னிரு வேங்கைகளதும் உருவப்படங்களைத் தாங்கிய பெரிய அளவிலான சுவரொட்டிகள் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஒட்டப்பட்டுள்ளன.

இவற்றைவிட குடாநாட்டில் பரவலாக சிவப்பு மஞ்சள் வர்ணக் கொடிகளும் பறக்கவிடப்பட்டுள்ளன.



லெப். கேணல் குமரப்பா

இவ் அஞ்சலி ஏற்பாடுகளின் முக்கிய நிகழ்வாக இன்று தீருவில் திடலில் நடைபெறவுள்ளது. தீருவில் திடலில் இப் பன்னிரு வேங்கைகளின

(4ஆம் பக்கம் பார்க்க)

# வடமராட்சியில் ஹெலி அனர்த்தம் மூன்று பேர் பலி; பலர் காயம்

## சில நிமிட நேரங்களில் பரவலான தாக்குதல்

[வடமராட்சி]

வடமராட்சிப் பகுதியில் பரவலாக சிறிலங்கா உலங்குவானூர்தி ஒன்று நேற்று மாலை 4. 20 மணியளவில் அகோர றொக்கட் குண்டு வீச்சு தாக்குதலை மேற்கொண்டதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் ஸ்தலத்தில் பலியாகினர். ஒன்பது பேர் காயமடைந்தனர். பத்துக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன.

தொண்டமனாறு பகுதிக்கு வந்த உலங்குவானூர்தி குடியிருப்புப் பகுதிகள் மீது பலத்த றொக்கட் தாக்குதலை மேற்கொண்டதில் இளம் குடும்பப் பெண் ஒருவரும் அவருடன் இருந்த இரண்டு வயதிற்குட்பட்ட கைக்குழந்தைகள் இருவரும் பலியானார்கள். அப்பகுதியில் நான்கு வீடுகள் சேதமடைந்தன.

தொண்டமனாறு வீரகத்திப் பிள்ளையார் கோவிலடியில் தங்கிவந்த பாமினி (வயது21) என்பவரும் அவருடன் இருந்த குழந்தைகளுமே பரிதாபகரமாக இறந்தனர்.

வல்வெட்டித்துறை வேம்படிப் பகுதியை வட்டமிட்ட

[4ஆம் பக்கம் பார்க்க]

# தென்மராட்சிப் பகுதியில் தொடரும் வான்தாக்குதல்

## 2 பொதுமக்கள் காயம்; கட்டடங்கள் சேதம்

(நமது நிருபர்)

சாவகச்சேரிப் பகுதியில் நேற்று மாலை சிறிலங்கா அரசுக்குச் சொந்தமான உலங்குவானூர்தியொன்று றொக்கட் தாக்குதலை நடாத்தியதில் இருவர் காயமடைந்தனர். வீடுகள், கடைகள் என்பன சேதமடைந்தன.

நேற்று மாலை 4 00 மணியளவில் சாவகச்சேரி சந்திக்கு அருகாமையிலுள்ள அரிசி ஆலைப் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலால் அங்கு வேலை செய்துகொண்டிருந்த மட்டுவில் தெற்கைச் சேர்ந்த முத்துசாமி தங்கராசா (வயது 38), நுணாவிலைச் சேர்ந்த கதிர்காமு சுந்தரலிங்கம் (வயது 30) ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர். தபால்

[4ஆம் பக்கம் பார்க்க[

## வரி விளம்பரம்

### வருமுன் காப்போம். வாந்திபேதி அச்சுறுத்தல்

மில்க்வைற் உதவுகிறது. உடல்சுதாதாரத்திற்குகாபோலிக் சேர்ந்த-மெடிக்கேற்றற் சோப் கட்டி ரூபா.8 - மலசலகூடம், கழிவுநீர்வாய்க்கால் சுத்திகரிப்புக்கு-நீமோல்போத்தல்-ரூபா 70!-. அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது, மில்க்வைற் (சி,7541)

### லலிதா சகஸ்ர நாமம்

லலிதா சகஸ்ர நாமம் (கிரந்த லிபி) வெளிவந்துள்ளது.சுப்பிரமண்ய சகஸ்ர நாமமும் உண்டு,தேவையானோர் தொடர்பு கொள்க சோ.நிர்மலேஸ்வர சர்மா, முருகமூர்த்திகோவில்.நவாலி, (சி.7545)

### ஆசிரியர் தினக் கூட்டம்

(வடமராட்சி)

வட இந்து மகளிர் கல்லூரியில் நாளை மறுதினம் (6 ஆம் திகதி) உலக ஆசிரியர் தினம் வடமராட்சி கல்விக் கோட்ட பிரதிப் பணிப்பாளர் திரு.எஸ்.செல்லத்துரை தலைமையில் பிற்பகல் 2.30மணிக்கு நடைபெறவுள்ளது. வடமராட்சி வடக்கு-தெற்கு பிரதேச செயலர் திரு.செ,ஸ்ரீனிவாசன் கலந்து கொண்டு ஆசிரியர் மகத்துவம் என்னும் தலைப்பில் சிறப்பு சொற்பொழிவு ஆற்றுவார். அதனைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் கோட்டரீதியாகவிளக்கு மாத இதழ் வெளியீடும் இடம் பெறும். (யோ)

### பாலர்பாடசாலை திறப்பு விழா

(கொழும்புத்துறை)

கட்டப்பிராய் சரஸ்வதி சனசமூக நிலையத்தின் புதிய பாலர்பாடசாலை கடந்த 1ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலாவினால் மங்கள விளக்கேற்றித் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்விற்கு நிலைய கல்விக்குழுத் தலைவர் திரு. இராசேந்திரம் ஸ்ரீபதி தலைமை தாங்கினார்.

சிறப்பு விருந்தினர்களாக ...

## சக்தி மூலவளமாக யானை இயற்கை ஆர்வலர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

சக்தி மூலவளமாக யானைகளை பயன்படுத்த முடியும் என்று இயற்கை ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அவர்கள் மேலும் கூறுகையில், கிராமப் புறங்களில் பல்வேறு தொழில்களையும் புரிவதற்கு யானைகளைப் பயன்படுத்த முடியும் என்றும் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரண்டு தசாப்தங்களிலும் எரிபொருள்களின் விலைகள் பலமடங்கு அதிகரித்துள்ளன இதனால் கைத்தொழில் பொருள்களின் செலவினங்கள் ஏறிவருவதாகவும் இந்த நிலையில் யானைகளின் சக்தியைக் கொண்டு பயன் பெற முடியும். சாதாரண யானை, இயந்திரங்களை விட பொருளாதார ரீதியில் பயனுடையது என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்'

எண்ணெயை இறக்குமதி செய்யும் இலங்கை போன்ற ஒரு நாடு யானைகளின் சக்தியை பயன்படுத்திக்கொள்வது சிறந்ததாகும் என்றும், யானைகளைப் பயன்படுத்துவதால்இவ்விலங்கினம்அழிந்து போவது தடுக்கப்படும் என்றும் அவர்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## இராணுவ தாக்குதலுக்கு சனசமூகநிலையங்கள் கண்டனம்

(கொழும்புத்துறை)

சமீபகாலமாக ஆனையிறவு, இயக்கச்சி, சாவகச்சேரி, கொடிகாமம், கோண்டாவில் உட்பட ஏனைய பகுதிகள் கண்மூடித்தனமான இராணுவத் தாக்குதல்களும், வான் தாக்குதல்களும் அப்பாவி பொதுமக்கள் மீது பல பகுதிகளிலும் மும்முனைத்தாக்குதல்களால் சிறார்கள், பெண்கள், வயோதிபர் உட்பட பலர் உயிர் இழந்தும் பலர் காயப்பட்டும் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத துன்பங்களையும் மன வேதனைகளையும் தாங்க முடியாது அல்லல்பட்டு வருகிறார்கள். இவ்வாறு யாழ். மாவட்ட சனசமூகநிலையங்களின் சம்மேளனம் தனது கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதை உடன் தடுத்து நிறுத்துவதற்கு சிறிலங்கா மாண்புமிகு ஜனாதிபதி திரு. டி. பி. விஜயதுங்காவுக்கு உடன் தெரியப்படுத்தி தங்கள் மேலான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி யாழ்மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின் சார்பில் இக்கண்டனத் தீர்மானத்தை யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## நிவாரணம் வழங்குமாறு ஒன்றியம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு, மேற்கு கிராமிய கடற்தொழில் சமூக அபிவிருத்தி அமைப்புக்களின் ஒன்றியம் தமது தொழில்கள் பாதிக்கப்பட்டிருப்பதை சுட்டிகாட்டி நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென்றுயாழ் அரசாங்க அதிபருக்கு கோரிக்கை விடுத்துள்ளன. பத்து அமைப்புகள் இணைந்துள்ள இவ் ஒன்றியத்தில் சுமார் தொளாயிரம் குடும்பங்கள் அங்கத்தவர்களாக இருப்பதாகவும் சிறுகடல் தொழிலில் ஈடுபடும் இவர்கள் தமது தொழிலை செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருப்பதால் நிவாரணம் வழங்கப்படவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். உயரபுலம், நவாலி, சாவல்கட்டு.மானிப்பாய் ஆகிய இடங்களைச் சேர்ந்த இவர்களுக்கு மீனவர் நிவாரணமும் கிடைப்பது அரிதாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.


## அகதி முகாமில் கண்நோய் பரவுகிறது

[யாழ்ப்பாணம்]

தீவக மக்கள் தங்கியிருக்கும் யாழ் புகையிரத நிலைய முகாமில் தற்போது கண்நோய் பரவி வருகின்றது. இந்நோயினால் இங்கு வசிக்கும் சில குடும்பங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் பீடிக்கப்பட்டுள்ளனர் பாடசாலை சென்று வந்த மாணவி ஒருத்தியினாலேயே இந்நோய் ஏற்பட்டதாக முகாம் வாசிகள் சிலர் தெரிவித்துள்ளனர். [22]

## புதிய பொருளாதாரம்...

## 5-ம் ஆண்டுக் கண்ணீர்க் காவியம்



பிறப்பு: 1 09 — 11 — 1967

மறைவு: 29 — 09 — 1988

### கீதன்

(நல்லூர்ச்செல்வன் சகாதேவன் செல்வகுமார்)

தினம்: 29 09 93. திதி 05-10-93

நல்லூரில் பிறந்து வளர்ந்து இருபத்தியோராம் வயதினிலே ஆசைத் தம்பியாம் சூட்டியுடன் இணைபிரியாது கீதன், சூட்டி மோட்டார் சயிக்கிள் பழுதுபார்க்கும் நிலையமதில் பழுது பார்த்து பேர் புகழுடன் அன்னை தந்தை அண்ணாமார், அக்கா, தம்பி, நண்பருடன் நீடூழி வாழ்வேனென நெஞ்சகத்துள் பலகோடி ஆசைகளை சுமந்து மலர்ந்த தாமரை மலர் போல புன்னகை தவழ்ந்த முகத்துடன் எல்லோருடனும் அன்பாகப் பழகித் திரிவீரே. சூது வாதற்ற உமக்கு அபூர்வபட்ஷ சதுர்த்ததி கார்த்திகையாம் நட்சத்திரத்தில் மதியம் போல் காலன் மின்னாமல், முழங்காமல் வெட்டி வீழ்த்திய மரம்போல் சாய்த்து வீழ்த்தினரோ, அன்றிலிருந்து வருடங்கள் ஐந்தாகியும் கீதன் இல்லா வாழ்வை எண்ணிப் பெற்றெடுத்ததாயாரும் தந்தையும் உடன் பிறந்த அண்ணாமாரும் அன்பான அக்காளும், ஆசைத் தம்பியும் நீர்போன வழிதேடி சோகமே உருவாகிக் கண்ணீரால் படைத்தவன் பாதம் அலம்பி மறுபிறவிதனில் அப்பாவுக்கும், அம்மாவிற்கும்—நீவீர் ஐவரும் இப்புவியில் பிறந்து நீடூழி வாழ இறைவனை வேண்டி நிற்கும்,

அன்பு அம்மா, அப்பா,
அண்ணா கண்ணன், ராதா
ஆசை அக்கா ஜெயா,
தனிமையில் வ டும் தம்பி சூட்டி,
மைத்துனன் ரவி, அண்ணி சரோ,
பெறாமக்கள் சாம்பவி, மதுராங்கன்,
அனுரங்கன், அனீனா.

தகவல்: அ. சகாதேவன்,
கீதன், சூட்டி மோட்டார் சயிக்கிள் பழுதுபார்ப்பவர்,
இராமலிங்கம் வீதி, நல்லூர்.

(6148)

## 6-ம் ஆண்டு நினைவாக

## நினைவு கூருகின்றோம்...

### 1993-10-05

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ் - பலாலி இராணுவ முகாமில் இந்திய - இலங்கை கூட்டுச்சதியை அம்பலப்படுத்தும் முகமாகச் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

விடுதலைப்புலிகளின் மத்தியகுழு உறுப்பினரும், திருமலை மாவட்டத் தளபதியுமான,

**லெப். கேணல் புலேந்திரன்** (குணநாயகம் தருமராசா - பாலையூற்று-திருமலை)

முன்னாள் மட்டு - அம்பாறைத் தளபதியும், யாழ் மாவட்டத்தளபதியுமான,

**லெப் கேணல குமரப்பா** (பாலசுந்தரம் இரத்தினபாலன் - நடராசா வீதி, ரேவடி - வல்வெட்டித்துறை)

**மேஜர் அப்துல்லா** (கணபதிப்பிள்ளை நகுலகுமார் - கச்சாய் வீதி, சாவகச்சேரி - யாழ்)

**கப்டன் பழனி** (பாலசுப்பிரமணியம் யோகேந்திரராஜா - பு வீதி - வல்வெட்டித்துறை)

**கப்டன் கரன்** (வைத்திலிங்கம் மனோகரன் - 20, சுவாட்ஸ் வீதி, சுண்டுக்குளி யாழ்)

**கப்டன் மிரேஸ்** (தவராஜா மோகனராஜா - ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை - யாழ்)

**கப்டன் நளன்** (கணபதிப்பிள்ளை குணேந்திரராஜா - ஐயனார்கலட்டி, பருத்தித்துறை யாழ்)

**லெப் அன்பழகன்** (தேசோமயானந்தம் உத்தமசிகாமணி சிவகுருவித்தியாசாலை வீதி வல்வெட்டித்துறை - யாழ்)

**லெப. தவக்குமார்** (சோமசுந்தரம் பாக்கியராஜா முள்ளியான், வெற்றிலைக்கேணி, வடமராட்சிகிழக்கு யாழ்)

**2 ம் லெப ரெஜினோல்ட்** (கபிரியேல் பேணாட் மரியநாயகம் முள்ளியான், வெற்றிலைக்கேணி வடமராட்சி கிழக்கு - யாழ்)

**2 ம் லெ. ஆனந்தகுமார்** (ஞானப்பிரகாசம் பிரான்சிஸ் அலோசியஸ் - மணற்காடு, குடத்தனை, வடமராட்சி கிழக்கு - யாழ்)

1988ஆம் ஆண்டு மணலாறு அளம்பில் உடப்புக்குளம் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய

**2 ம் லெப் கௌசிகன்** (வெற்றிவேலு கருணாகரன்- 2 ம் வட்டாரம், முள்ளியவளை - முல்லைத்தீவு)

ஊர்காவற்றுறைப் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதிகள் மேற்கொண்ட முற்றுகையின் போது வீரச்சாவெய்திய

**ரஞ்சன்** (பொன்னுத்துரை உதயகுமார் - அரியாலை - யாழ்)

மணலாறு - அளம்பில் வீதியில் இந்தியப்படையினரால் வீட்டுக்குள்ளிருந்து இழுத்து வரப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட பெண் உட்பட 04 தமிழர்கள்.

யாழ் - அச்சுவேலி, இடைக்காடுப் பகுதியில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட 02பொது மக்கள்.

1989ஆம் ஆண்டு மாங்குளம் சந்தியில் அமைக்கப்பட்டிருந்த தேசவிரோத சக்திகளின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**கப்டன் ஆனந்தன்** (சுப்பிரமணியம் கருணாகரன் - செம்மலை, அளம்பில் - மணலாறு)

**பாரத்** (செபமாலை கியோமர் பெர்னான்டோ - வண்ணாங்குளம் - முல்லைத்தீவு)

1990ஆம் ஆண்டு அம்பாறை - கோமாரி இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போன பொத்துவிலைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட குமாரவேலியார் கிராமம், வேப்பவெட்டுவான் பகுதிகளைச் சேர்ந்த 02தமிழர்கள்.

1992ஆம் ஆண்டு மட்டுநகரில் பாம்பு தீண்டியதில் எமைப் பிரிந்த-

பிரிவு ஆற்றுவார். அதனைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் கோட்ட ரீதியாகவிளக்கு மாத இதழ் வெளியீடும் இடம் பெறும். (யோ)

## பாலர்பாடசாலை சிறப்பு விழா

(கொழும்புத்துறை)

கட்டப்பிராய் சரஸ்வதி சனசமூக நிலையத்தின் புதிய பாலர்பாடசாலை கடந்த 1ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலாவினால் மங்கள விளக்கேற்றித் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்விற்கு நிலைய கல்விக்குழுத் தலைவர் திரு. இராசேந்திரம் ஸ்ரீபதி தலைமை தாங்கினார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். முறைசாராக் கல்விப் பிரிவு கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். சுப்பிரமணியம், தெங்குபனம் பொருள் விற்பனவு கூட்டுறவுச் சங்கம் திரு. ஞானரத்தினம், யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம், சமாசத் தலைவர் திரு. வி. வி. இராசரத்தினம், யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் நிர்வாகச் செயலாளர் திரு. சி. சி. வரதராசா, நிலையப் போஷகர் திரு. தீ. பன்னீர்ச்செல்வம் ஆகியோர் உரை நிகழ்த்தினர். (24)


**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

**O/L** 2 மாத கால துரித மீட்டல் வினா - விடை

ஆரம்பம்:- **07.10.93** வியா. 3 மணி

ஃ கணிதம் திரு. சதீஸ்
ஃ விஞ்ஞானம் திரு தயாநிதி
ஃ சமூகக்கல்வி திரு ரூபேட்
ஃ தமிழ் திரு பிரதீபன்
ஃ ஆங்கிலம் திரு. கிரிதரன்
ஃ வர்த்தகம் திரு சக்தி
ஃ சைவசமயம் திரு கிரி

(சி 7548)


...அபிவிருத்தி அமைப்புக்களின் ஒன்றியம் தமது தொழில்கள் பாதிக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டி நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென்றுயாழ் அரசாங்க அதிபருக்கு கோரிக்கை விடுத்துள்ளன. பத்து அமைப்புகள் இணைந்துள்ள இவ் ஒன்றியத்தில் சுமார் தொளாயிரம் குடும்பங்கள் அங்கத்தவர்களாக இருப்ப... நிலை ஏற்பட்டிருப்பதால் நிவாரணம் வழங்கப்படவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். உயரபுலம், நவாலி, சாவல்கட்டு. மானிப்பாய் ஆகிய இடங்களைச் சேர்ந்த இவர்களுக்கு மீனவர் நிவாரணமும் கிடைப்பது அரிதாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

## அகதி முகாமில் கண்நோய் பரவுகிறது

[யாழ்ப்பாணம்]

தீவக மக்கள் தங்கியிருக்கும் யாழ் புகையிரத நிலைய முகாமில் தற்போது கண்நோய் பரவி வருகின்றது. இந்நோயினால் இங்கு வசிக்கும் சில குடும்பங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் பீடிக்கப்பட்டுள்ளனர் பாடசாலை சென்று வந்த மாணவி ஒருத்தியினாலேயே இந்நோய் ஏற்பட்டதாக முகாம் வாசிகள் சிலர் தெரிவித்துள்ளனர். [22]

## புதிய பொருளாதாரம் கட்டியெழுப்ப வேண்டும்

**- சந்திரிகா குமாரணதுங்கா**

(கொழும்பு)

தினசரி இரண்டுவேளை உண்ண வழியில்லாத பிள்ளைகளுக்கு ஒழுங்கான முறையில் கல்வியைப் பெற்றுக்கொள்ள வழி செய்ய முடியாத படித்தோருக்கு தொழில் வாய்ப்பை பெற்றுக்கொடுக்க முடியாத எந்த ஒரு பொருளாதாரத் திட்டத்தாலும் பயன் இலலை இவ்வாறான பொருளாதாரத் திட்டத்தை ஒழித்துவிட்டு நாட்டில் வறியவர்களை வாழ வைக்கக்கூடிய பொருளாதாரத்தை கட்டி எழுப்ப சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆயத்தமாக இருக்கிறது.

இவ்வாறு மேல்மாகாண முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கதெரிவித்தார். அண்மையில் அக்குரஸ்ஸ மாரப்பதெ பாலகொட மின்திட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசிய அவர் மேலும் கூறுகையில்முன்னைய அரசாங்கம் சுவீகரித்த காணிகளையும், தோட்டங்களையும் இன்றைய அரசாங்கம், கம்பெனிக்காரர்களுக்கும், வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் தாரை வார்த்துக் கொடுத்து வருகிறது என்றும் குற்றம் சாட்டினார்.


**அறிவித்தல்**

இந்து மதகுருமார் ஒன்றிய அங்கத்தவர்கள் யாவருக்கும் கி. நாராயணக்குருக்கள் ஆகிய நான் [30-9-93] அன்றிலிருந்து எனது பொருளாளர் பதவியிலிருந்து விலகிவிட்டேன். 13-9-93-ல் கடிதம் கொடுத்தேன். இதனை யாவருக்கும் அறியத்தருகிறேன்.

இப்படிக்கு
கி. நாராயணக்குருக்கள்

(6217)



யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச் சபை.

**கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரி**

யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியினால் 1993.10.06ம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டிருந்த முகாமைத்துவம் தொடர்பானஉயர்தரதேசிய சான்றிதழ் பாட நெறி'' தவிர்க்க முடியாத காரணத்தினால் பின்போடப்பட்டுள்ளது. மீண்டும்ஆரம்பிக்கும்திகதி விரைவில் அறிவிக்கப்படும்.

(சி.7547) செயலாளர்.


...யும் நீர்போன வழிதேடி சோகமே உருவாகிக் கண்ணீரால் படைத்தவன் பாதம் அலம்பி மறுபிறவிதனில் அப்பாவுக்கும், அம்மாவிற்கும்—நீவீர் ஐவரும் இப்புவியில் பிறந்து நீடூழி வாழ இறைவனை வேண்டி நிற்கும்,

அன்பு அம்மா, அப்பா,
அண்ணா கண்ணன், நாதா
ஆசை அக்கா ஜெயா,
தனிமையில் வடும் தம்பி குட்டி,
மைத்துனன் ரவி, அண்ணி சரோ,
பெறாமக்கள் சாம்பவி, மதுராங்கன்,
அனுரங்கன், அனீஸா.

தகவல்: அ. சகாதேவன்,
கீதன், குட்டி மோட்டார் சயிக்கிள் பழுதுபார்ப்பவர்,
இராமலிங்கம் வீதி, நல்லூர்.

(6148)

## 6-ம் ஆண்டு நினைவாக



**மேஜர் அப்துல்லா**

(கணபதிப்பிள்ளை நகுலகுமார்)

கச்சாய் வீதி, சாவகச்சேரி

**தாயக மண்ணில்:** 20-07-1963

**வீரச்சாவு:** 05-10-1987

தாயக மண்மீட்பில் தாளாத பற்றுடன்
ஓயாது செயற்பட்ட உத்தமனே—நீயும்
உன்னோடு இணைந்தோரும் எம்
நினைவில் என்றும் நிற்பீர் நிலைத்து.

— குடும்பத்தினர்

(சி-7546)

மணலாறு - அளம்பில் வீதியில் இந்தியப்படையினரால் வீட்டுக்குள்ளிருந்து இழுத்து வரப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட பெண் உட்பட 04 தமிழர்கள்.

யாழ் - அச்சுவேலி, இடைக்காடுப் பகுதியில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட 02பொது மக்கள்.

1989ஆம் ஆண்டு மாங்குளம் சந்தியில் அமைக்கப்பட்டிருந்த தேசவிரோத சக்திகளின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**கப்டன் ஆனந்தன்** (சுப்பிரமணியம் கருணாகரன் - செம்மலை, அளம்பில் - மணலாறு)

**பாரத்** (செபமாலை கியோமர் பெர்னான்டோ - வண்ணாங்குளம் - முல்லைத்தீவு)

1990ஆம் ஆண்டு அம்பாறை - கோமாரி இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போன பொத்துவிலைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட குமாரவேலியார் கிராமம், வேப்பவெட்டுவான் பகுதிகளைச் சேர்ந்த 02தமிழர்கள்.

1992ஆம் ஆண்டு மட்டுநகரில் பாம்பு தீண்டியதில் எமைப் பிரிந்த-

**கணேஸ்வரன் வெள்ளி** (சின்னத்தம்பி கந்தசாமி - கோணாவில் வடக்கு, அக்கரைப்பற்று - அம்பாறை)

மட்டுநகரில் சிறிலங்கா காவல்படையின் காவலரணுக்கருகே காவல்துறையின் வாகனம் மோதியதில் சயிக்கிளில் சென்ற ஒரு தமிழர் பலி.

கிளாலிக் கடற்பரப்பில் பயணிகள் படகு மீது சிறிலங்கா கடற்படையினர் தாக்குதல் மேற்கொண்டதில் பலியான 04 தமிழர்கள்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-7537]


இளைப்பாறிய அதிபர்

**திரு. செ சோதிப்பெருமாள், ஜே பி**

அவர்களின்

**பாராட்டு விழா**

காலம்: 1993-10-06 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 5.30 மணி

இடம்: "சரஸ்வதி கலை அரங்கம்" இணுவில் மத்திய கல்லூரி.

தலைவர்: திரு சபா. ஜெயராசா அவர்கள்.

**பிரதம விருந்தினர்**

உயர் திரு இரா சுந்தரலிங்கம் அவர்கள்
வடமாநிலக் கல்விப்பணிப்பாளர்.

சமயப் பெரியார்கள், கல்வியியலாளர்கள் உரைகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

ஊர்வலம்: இணுவில் இசைக்கலைஞர்களின் தவில், நாதஸ்வர இசைகளுடன் ஸ்ரீபரராசசேகரப் பிள்ளையார் கோவிலில் இருந்து பிற்பகல் 4.00 மணிக்கு ஆரம்பமாகும்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**செ. இலகுநாதன்**
விழாக்குழு செயலாளர்,
இணுவில் மக்கள் சார்பாக.

(6214)

### சிந்தனைக்கு

"சுதந்திரம்" என்பதே அவர்கள் போர்க்குரல்;
சுதந்திர இல்லையேல், செத்து மடிய உரிமை.
-ஜி. எச். பே க்கர்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 05-10-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண்-05


## தமிழருக் கெதிராக அன்று நடந்த கூட்டுச் சதி

லெப். கேணல் புலேந்திரன், லெப் கேணல் குமரப்பா உட்பட 12 விடுதலைப் புலிகளின் ஆறாம் ஆண்டுநினைவுநாள் இன்றாகும். இப்புகழ்பூத்த இரு தளபதிகள் உட்பட பன்னிரண்டு பேரும் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் 'சயனைட்' உட்கொண்டு மரணமடைந்தவர்கள் அல்ல. இந்திய சிறிலங்கா அரசுகளின் நம்பிக்கைத் துரோகத்தின் சாட்சிகளாக தம்முயிரை தற்கொடை செய்தவர்கள்.

சாகும்வரை உண்ணா நோன்பிருந்து தியாகி திலீபன் உயிர் துறந்தபோது இந்தியா தமிழ் மக்களை நட்டாற்றில் கைவிட்டுவிட்டது என்பதை தமிழ் மக்கள் புரிந்து கொண்டார்கள். அதே வேளை, லெப். கேணல் புலேந்திரன், லெப். கேணல் குமரப்பா உட்பட 12 வேங்கைகள் மரணமடைய வேண்டிய நிலை ஏற்பட்டபோது இந்தியா தமிழ் மக்களை கைவிட்டது மட்டுமல்ல, சிங்களப் பேரினவாதத்திடம் காட்டிக்கொடுக்கவும் தயாராக உள்ளது என்பதை மக்கள் விளங்கிக் கொண்டனர்.

லெப் கேணல் புலேந்திரன், லெப். கேணல் குமரப்பா உட்பட 17 விடுதலைப்புலிகளை தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படை பிடித்தபோது அவர்கள் அதனை பெரிதாக எடுக்கவில்லை. அவ்வாறு பிடிப்பார்கள் எனவும் அவர்கள் கருதவில்லை. பிடிப்பார்கள் எனக் கருதியிருந்தால் அவ்வாறு சென்றிருக்கவும் மாட்டார்கள். எதிர்ப்பின்றி, உயிருடன் ஒருபோதும் அவர்கள் கைதாகி இருக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டிருக்காது. அதாவது புலிகளின் மரபிற்கு மீறி 'கைதாகுதல்' என்பதே இடம் பெற்றிருக்காது.

இந்திய - சிறிலங்கா உடன்பாட்டில் தமக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பை அவர்கள் நம்பினார்கள். தமது நடமாட்டம் சட்டபூர்வமானது, சட்டத்திற்கு விரோதமற்றது என்ற காரணத்தினாலேயே அவர்கள் தமது பாதுகாப்பு பற்றிக் கவலைப்படாது கடற்பரப்பில் சென்றார்கள்; கைதாவதற்கும் சம்மதித்தார்கள்.

ஆனால், ஒப்பந்தத்தை சிறிலங்கா அரசாங்

# பன்னிரு வேங்கைகளின் பேரிழப்பு; மண்ணை பீடித்த மாயையை சாகடித்தது!

லெப். கேணல் புலேந்திரன், லெப். கேணல் குமரப்பா உட்பட பன்னிரு வேங்கைகள் இலங்கை-இந்திய கூட்டுச் சதியினால் உயிரிழந்த சம்பவத்தின் மூன்றாம் ஆண்டின் நினைவாக தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரன் வெளியிட்ட அறிக்கையை இங்கு தருகிறோம்.

இன்றைய எமது சுதந்திரப் போராட்ட வரலாற்றில ஒரு முக்கிய தினம், மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இன்றைய தினத்தில் தமிழீழத் தேசம் என்றுமில்லாத ஒரு பேரிழப்பைச் சந்தித்தது. அன்று எமது விடுதலை இயக்கத்தின் வீரத்தளபதிகளான குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரண்டு மாவீரர்களை இழந்து, நாம் இரத்தக் கண்ணீர் வடித்தோம்.

### மரணம் மாயைகளைச் சாகடித்தது

இவர்களது இழப்பால் தமிழீழத் தேசமே சோகத்தில் மூழ்கியது ஆயினும், இவர்களது மரணம் எமது மனதைப் பீடித்திருந்த மாயைகளைச் சாகடித்தது. போலி நம்பிக்கைளைக் கொன்றது. எமது மக்களின் நியாய பூர்வமான போராட்டத்திற்கு முட்டுக் கட்டையாக இருந்த விரோத சக்திகள் யார் என்ற உண்மையையும் எமக்குஉணர்த்திக் காட்டியது. எனவே இந்தப் பேரிழப்பு, என்றுமில்லாதபடி ஒரு புதிய விழிப்புணர்வையும் சுதந்திர வேட்கையையும் எமக்கு தந்தது. நாம் எந்த அன்னிய சக்தியிலும் தங்கி இருக்கக் கூடாது. எமது சுதந்திரத்தை நாமே போராடி வென்றெடுக்க வேண்டும் என்ற அபாரமான சுய நம்பிக்கையை இவர்களது சாவு எமக்குக் கொடுத்தது. இந்த வகையில் இம் மாவீரர்களின் உயிர்த் தியாகம் எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் பெரியதொரு திருப்பு முனையாக அமைந்தது என்று தான் சொல்லவேண்டும். இந்த மாவீரர்களின் மரணத்தை அடுத்து இந்திய இராணுவம் எமது இயக்கம் மீது போர் தொடுத்தது. உலகத்தின் மிகப் பெரிய இராணுவம் ஒன்றை நாம் எதிர்த்து நின்று போராடினோம். பெரியதொரு வல்லரசை எதிர்த்து நின்று போராடும் அளவிற்கு ஆன்மிக திடத்தையும், அசையாத நம்பிக்கையையும் எமக்குப் பெற்றுக் கொடுத்தது இந்தப் பன்னிரண்டு மாவீரர்களின் அற்புதமான தியாகமாகும்.

### கூட்டுச் சதி

இந்திய-இலங்கை அரசுகளின் கூட்டுச்சதிக்கு இந்த இளம்புலி வீரர்கள் மரணமானார்கள் ஆனால் அவர்களது மரணம் சாதாரண சோக நிகழ்வு அல்ல. தமிழீழத்தேசிய இனத்தில் சுதந்திர எழுச்சியைத் தூண்டி விட்ட ஒரு வரலாற்று நிகழ்வாகவே இது அமைந்தது.

இழப்புகளும், அழிவுகளும் ஒரு விடுதலைப் போராட்டத்தில் சர்வ சாதாரண நிகழ்வுகள். நாம் எத்தனையோ இழப்புக்களையும், அழிவுகளையும் சந்தித்துள்ளோம்; சந்தித்து வருகிறோம். ஆனால் இந்த இழப்புகளும், அழிவுகளும் எமது ஆன்ம உறுதிக்கு உரமாக அமைந்து விட்டால் உலகத்தில் எந்தவொரு சக்தியாலும் எம்மை அடக்கி விட முடியாது.

### ஆத்ம பலம்

இன்று நாம் எமது வரலாற்று எதிரியை யுத்த களத்தில் சந்தித்து நிற்கிறோம். எமது எதிரியானவன் தனது முழு ஆயுத பலத்தையும் பிரயோகித்து ஒரு இனக்கொலை யுத்தம் நடத்தி வருகிறான்.

எதிரியிடம் ஆயுத பலமுண்டு ஆட்பலமுண்டு, ஆதரவளிக்க நாடுகளுண்டு. நாம் தனித்து நின்று போராடுகிறோம். எமக்கு எந்த நாட்டின் உதவியுமில்லை. ஆனால் எமக்குள்ள ஒரேயொருபலம் எமது ஆத்ம பலம் தான்.

ஆகாயத்தில் இருந்து விழும் குண்டுகள், எமது கட்டடங்களை அழிக்கலாம், வீடுகளை அழிக்கலாம், கோவில்கள், பாடசாலைகளை அழிக்கலாம். ஆனால் எத்தகைய குண்டு வீச்சும் எமது மனோபலத்தை அழித்துவிட முடியாது.

### எதிரி ஆட்டம் கண்டுள்ளான்

இன்று எதிரி ஆட்டம் காண்கிறான். பல யுத்த அரங்குகளிலிருந்து பின்வாங்கி ஓடுகிறான். எமது போராளிகளின் உருக்குப் போன்ற உறுதியும், வீரமும், தியாகமும், இலட்சியப் பற்றும் எதிரியின் மனோபலத்தை உடைத்து வருகிறது.

நாம் உறுதியுடன் தொடர்ந்து போராடுவோம். எமது தாயகப் பூமியை எதிரியிடமிருந்து மீட்டெடுத்து, சுதந்திரத் தமிழீழம் அமைக்கும் வரை நாம் தொடர்ந்து போராடுவோம்.

எமது மடிந்த மாவீரர்களின் கனவை நனவாக்க நாம் தொடர்ந்து போராடுவோம்.

## சுகாதாரம் பேணப்படுவதன் மூலமே கொலரா பரவுவதை தடுக்க முடியும்

### யாழ்ப்பாண அரசாங்க அதிபர்.

(யாழ்ப்பாணம்)

தற்சமயம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பயப் பீதிக்கு உள்ளாக்கிஇருக்கும், கொலரா நோயை வைத்தியசாலைகளாலோ அல்லது வைத்தியர்களாலோ மட்டும் முற்றாக ஒழிக்க முடியாது. மக்களிடையே கல்வியறிவு, சுகாதாரம் மற்றும் சுக வாழ்வு ஆகியன சிறந்த முறையில் பேணப்பட்டு வந்தாலேயே இதனை முற்றாக ஒழிக்க முடியும்.

இவ்வாறு யாழ்ப்பாண அரசாங்கஅதிபர் கொலரா நோய் தொடர்பாக தற்சமயம் ஏற்பட்டுள்ள பயப்பீதியையிட்டு கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், சன நெருக்கடி மிகுந்த பகுதிகளில் வாழும் மக்களும், அகதி முகாம்களில் வாழ்கின்ற மக்களும், தாங்கள் தாங்கள் பாவிக்கு தவிர்க்க முடியும். அத்துடன் கழிவுப் பொருள்களை கண்ட இடங்களிலும் போடாமல் அதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் போடுவது போன்ற நடைமுறைகளை கண்டிப்பாக பின்பற்றுவதன் மூலமும் இத்தகைய அபாயகரமான நோய்களைத் தவிர்க்க முடியும்.

எனவே மக்களிடையே சுகாதாரக் கல்வியறிவை வளர்ப்பது முக்கியம். அதற்காக பாடசாலைகள், கல்விச்சாலைகள் மற்றும் பொதுஸ்தாபனங்கள் என்பன தங்களின் எல்லைக்கு உட்பட்ட மக்களுக்கு போதிய சுகாதாரக் கல்வியை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் மேலும் கேட்டுக்கொண்டார்

(பா)

## ருஷ்ய அதிபருக்கு ஆதரவு பிரிட்டன், அமெரிக்காக தெரிவிப்பு

[லண்டன்]

ருஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்சினுக்கு ஆதரவு காட்டுமாறு பிரிட்டன் பிரதமர் ஜோன் மேயர் ருஷ்ய மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

உலகெங்கும் உள்ள ஜனநாயக வாதிகளுக்கென பொதுப் மக்களுக்கு தலைமை வகித்து முன்னின்று வழி நடத்திச் செல்வதற்கான மிகத் தெளிவான வாக்களிப்பு ஒன்றை தம்நாட்டு மக்களிடமிருந்து பொறிஸ் யெல்ட்சின் பெற்றிருப்பதாகவும் கூறியுள்ளார்.

அத்துடன் அமெரிக்க அதி

## பொங்குமா தமிழீழத்தின் பொற்குவைகள்!

இந்திய இலங்கை ஆட்சி
இழிஞர்கள் இணைந்து கூடிப்
பின்னிய கொடிய சூழ்ச்சிப்
பிழம்பிலே சிக்கித் தங்கள்
இன்னுயிர் ஈந்த மேலோர்
ஈராறு வேங்கை வீரர்!
ஆறாவ தாண்டாம் இந்நாள்
அஞ்சலிக்குரிய பொன்நாள்!]

குன்றென நிமிர்ந்த தோளோர்
"குமரப்பா" "புலேந்தி அம்மான்"
வென்றிட வொண்ணா வீரம்
விளங்கிடும் "அப்துல் லா"வும்
நன்றெனக் களத்தே பாயும்
"நளன்" "ரகு" "பழனி" மற்றும்
நின்றெதிர் கொள்ளும் வீரம்
நிமிர்வுடை "கரன்" "மிரேசும்'

இணையிலாத் 'தீரன்' 'ரெஜினோல்ட்'
'தவக்குமார்' "அன்பழகன்"
அணைந்திடாச் சுடரானார்கள்
"ஆனந்தக்குமாரி" னோடே

பேரினவாதத்திடம் காட்டிக்கொடுக்கவும் தயார க உள்ளது என்பதை மக்கள் விளங்கிக் கொண்டனர்.

லெப் கேணல் புலேந்திரன், லெப். கேணல் குமரப்பா உட்பட 17 விடுதலைப்புலிகளை தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படை பிடித்த போது அவர்கள் அதனை பெரிதாக எடுக்கவில்லை. அவ்வாறு பிடிப்பார்கள் எனவும் அவர்கள் கருதவில்லை. பிடிப்பார்கள் எனக் கருதியிருந்தால் அவ்வாறு சென்றிருக்கவும் மாட்டார்கள். எதிர்ப்பின்றி, உயிருடன் ஒருபோதும் அவர்கள் கைதாகி இருக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டிருக்காது. அதாவது புலிகளின் மரபிற்கு மீறி 'கைதாகுதல்' என்பதே இடம் பெற்றிருக்காது.

இந்திய - சிறிலங்கா உடன்பாட்டில் தமக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பை அவர்கள் நம்பினார்கள். தமது நடமாட்டம் சட்டபூர்வமானது, சட்டத்திற்கு விரோதமற்றது என்ற காரணத்தினாலேயே அவர்கள் தமது பாதுகாப்பு பற்றிக் கவலைப்படாது கடற்பரப்பில் சென்றார்கள்; கைதாவதற்கும் சம்மதித்தார்கள்.

ஆனால், ஒப்பந்தத்தை சிறிலங்கா அரசாங்கம் மீறியது, எதிர்ப்பின்றி கைதாகிய விடுதலை புலிகளை கொழும்பிற்குக் கொண்டு செல்லும் முயற்சியில் இறங்கியது. விடுதலைப்புலிகள், இது குறித்து விடுத்த எச்சரிக்கை எதையும் சிறிலங்காவும், இந்திய அரசும் கருத்திற் கொள்ளவில்லை. சிறிலங்கா அரசிற்கோ, விடுதலைப்புலிகளின் இரு முக்கிய தளபதிகளை பிடித்துவிட்டோம். எவ்வாறாவது அவர்களை ஒழித்துக் கட்டிவிட வேண்டும் என்ற எண்ணம். இந்திய அரசிற்கோ, தமிழர்தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கு முதுகெலும்பாய் உள்ளவர்களும், இந்தியாவின் விருப்புக்களை திணிக்க முடியாதவர்களுமான விடுதலைப்புலிகளை ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற அவா.

இந்நிலையில், சிறிலங்கா அரசும், இந்திய அரசும் கூட்டாகவே இவ்விடயத்தில் சதி செய்தன. யாழ்ப்பாணத்தில் இருந்த இந்திய இராணுவத் தளபதி ஒருவர், "இந்தியா ஏன் இவ்வாறு நடந்து கொண்டது எனத் தெரியாது. சிறிலங்காவுடன் பேசிப் பிரச்சினையை தீர்த்துக் கொண்டிருக்கலாம். அல்லது இராணுவ நடவடிக்கை மூலம் புலிகளை விடுவித்திருக்கலாம்" எனத் தெரிவித்திருந்தார். இதற்கு, சிறிலங்கா அரசும் இந்திய அரசும் கூட்டாக இச்சதியில் ஈடுபட்டுள்ளன என்பதை அவ் இராணுவ அதிகாரியல் புரிந்து கொள்ள முடியாமல் போனமையே காரணமாகும்.

அதாவது, இந்தியாவும், சிறிலங்காவும் கூட்டாக தமிழ் மக்கள்மீது ஒரு போரைத் திணித்தன. தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டம் விடுதலைப்புலிகளின் தலைமையில் தொடருமானால், தமிழீழம் உருவாவது தவிர்க்க முடியாது என்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர். இது சிறிலங்காவின் பேரினவாதத்திற்கும், இந்தியாவின் வல்லாதிக்கப் போக்கிற்கும் முட்டுக்கட்டையாக அமைந்துவிடும் என இருதரப்பும் கருதின. இதன் காரணமாகவே இச்சதி உருப்பெற்றது

ஆனால், இந்தியாவும், சிறிலங்காவும் எதிர்பார்த்தது போன்று, தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை அவர்களினால் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியவில்லை. இந்திய, சிறிலங்கா இராஜதந்திரத்திற்கும், இராணுவத்திற்கும் தம்மால் ஈடுகொடுக்க முடியும் என்பதை விடுதலைப்புலிகள் வெளிக்காட்டினர். இந்திய இராணுவத்தை தமிழீழ மண்ணில் இருந்து வெளியேற்றினர். சிங்களப் பேரினத்திற்கு எதிராக தொடர்ச்சியாக இன்னமும் போராடியும் வருகின்றனர். இதற்கு அன்று அவ் வீரத் தளபதிகளின் தற்கொடையனது உந்து சக்தியானது.

## யாழ்ப்பாண அரசாங்க அதிபர்.

(யாழ்ப்பாணம்)

தற்சமயம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பயப் பீதிக்கு உள்ளாக்கிஇருக்கும், கொலரா நோயை வைத்தியசாலைகளாலோ அல்லது வைத்தியர்களாலோ மட்டும் முற்றாக ஒழிக்க முடியாது. மக்களிடையே கல்வியறிவு, சுகாதாரம் மற்றும் சுகவாழ்வு ஆகியன சிறந்த முறையில் பேணப்பட்டு வந்தாலேயே இதனை முற்றாக ஒழிக்க முடியும்.

இவ்வாறு யாழ்ப்பாண அரசாங்கஅதிபர் கொலரா நோய் தொடர்பாக தற்சமயம் ஏற்பட்டுள்ள பயப்பீதியையிட்டு கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், சன நெருக்கடி மிகுந்த பகுதிகளில் வாழும் மக்களும், அகதி முகாம்களில் வாழ்கின்ற மக்களும், தாங்கள் தாங்கள் பாவிக்கின்ற மலசல கூடங்களை ஒவ்வொருவரும் பாவிப்பதற்கு முன்பாக தொற்று நீக்கிகளை பாவிப்பதன் மூலமும், மலசல கூடத்தை பாவித்த பின்னர் கைகளை நன்றாக சவர்க்காரம் கொண்டு கழுவுவதன் மூலமும் மற்றும் இத்தகைய சுகாதார முறைகளை கடைப்பிடிப்பதன் மூலமும் நோய்ப் பெருக்கத்தை ஓரளவுக்கு தவிர்க்க முடியும். அத்துடன் கழிவுப் பொருள்களை கண்ட இடங்களிலும் போடாமல் அதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் போடுவது போன்ற நடைமுறைகளை கண்டிப்பாக பின்பற்றுவதன் மூலமும் இத்தகைய அபாயகரமான நோய்களைத் தவிர்க்க முடியும்.

எனவே மக்களிடையே சுகாதாரக் கல்வியறிவை வளர்ப்பது முக்கியம். அதற்காக பாடசாலைகள், கல்விச்சாலைகள் மற்றும் பொதுஸ்தாபனங்கள் என்பன தங்களின் எல்லைக்கு உட்பட்ட மக்களுக்கு போதிய சுகாதாரக் கல்வியை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் மேலும் கேட்டுக்கொண்டார் (பா)

### ஸ்தாபகர் ஹென்றி டுனான் நினைவு விழா

(சொழும்புத்துறை)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ். கிளையின் அனுசரணையுடன் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவு (வலி வடக்கு) நடாத்தும் செஞ்சிலுவைச்சங்க ஸ்தாபகர் ஹென்றி டுனான்ஞாபகார்த்த விழா யாழ். இராமநாதன் கல்லூரி, மருதனார் மடத்தில் எதிர்வரும் 9ஆம் திகதி சனிக் கிழமையும், 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும் என விழாச் செயலாளர் திரு. சோ. செல்வரத்தினம் தெரிவித்துள்ளார். (24)

### சைவசித்தாந்த சஞ்சிகை வெளியீடு

(குருநகர்)

சைவ சித்தாந்த ஆய்வு வட்டம் வெளியிடும் அரை ஆண்டு ஆங்கில சஞ்சிகை வெளியீடு கடந்த ஞாயிறு (3 10 93) மாலை 4 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

திரு ச. முத்தையா தலைமையில் நடைபெற்ற வெளியீட்டு வைபவத்தில் திரு. சி. நந்தகுமார் (தமிழ்மகன்) சஞ்சிகையின் ஆய்வுரையை நிகழ்த்தினார்.

அறிஞர்கள், கலைஞர்கள், சைவ அபிமானிகள் நூற்றுக் கணக்கில் கலந்து கொண்டனர். ஆய்வுவட்ட பொதுச் செயலர் திரு. வி ஜே. கொன்ஸரன்ரைன் நன்றி கூறினார். (21)

## ருஷ்ய அதிபருக்கு ஆதரவு
## பிரிட்டன், அமெரிக்காக தெரிவிப்பு

[லண்டன்]

ருஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்சினுக்கு ஆதரவு காட்டுமாறு பிரிட்டன் பிரதமர் ஜோன் மேயர் ருஷ்ய மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

உலகெங்கும் உள்ள ஜனநாயக வாதிகளுக்கென பொதுப் படையாக வெளியிடப்பட்ட இவ் வேண்டுகோளில் மேலும் அவர் கூறுகையில், தம்நாட்டு மக்களுக்கு தலைமை வகித்து முன்னின்று வழி நடத்திச் செல்வதற்கான மிகத் தெளிவான வாக்களிப்பு ஒன்றை தம்நாட்டு மக்களிடமிருந்து பொறிஸ் யெல்ட்சின் பெற்றிருப்பதாகவும் கூறியுள்ளார்.

அத்துடன் அமெரிக்க அதிபர் பில் கிளின்டனும் கூட ரஷ்ய அதிபருக்கான தனது ஆதரவை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

## நிலநடுக்கத்தால் பாதிப்புற்றவருக்கு உதவிப்பொருள்கள்குவிகின்றன

(பம்பாய்)

— இந்தியா தெரிவிப்பு

மகாராஸ்டிரா மாநிலத்தில் அண்மையில் நேரிட்ட நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி புரிவதற்கான உதவிப் பொருள்களும் சகாய நிதியும் உலகின் பல பாகங்களிலுமிருந்தும் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டுள்ளன. மருந்துகள், தற்காலிக உறைவிடவசதிகள், துணிகள், பணவசதிகள் என்பன இந்த உதவிப் பொருள்களில் அடங்கும்.

உதவிப் பொருள்களின் ஒரு தொகுதியை ஏற்றிய அமெரிக்கப் போக்குவரத்து விமானமொன்று பம்பாயில் தரையிறங்கியுள்ளது. பங்களாதேஷ் நாட்டின் செம்பிறைச் சங்கத்தார் பத்தாயிரம் டாலர்களை உதவித் தொகையாக வழங்கியுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சகத்தை சேர்ந்த பணியாளர்கள் அனைவரும் தமது ஒரு நாள் உணவுத் தொகையை பிரதமரின் நிவாரண நிதியத்திற்கு வழங்கியுள்ளனர்.

இராணுவத்தினர் பதினைந்து இலட்சம் ரூபாவையும், விமானப்படையினர் பத்து இலட்சம்ரூபாவையும் நிலக்கரி நிறுவனம் ஒரு கோடி ரூபாவையும், நிவாரண நிதியத்திற்காக ஒதுக்கியுள்ளனர்.

இது வரைஇருபகுதிகளிலிருந்து பத்தாயிரத்திற்கும் அதிகமான சடலங்கள் மீட்கப்பட்டதாகவும், இச் சம்பவத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை முப்பத்தையாயிரமாக அதிகரிக்கும் என்றும் கூறப்படுகின்றது.

## மாநில அரசின் பாதுகாப்பு ஏற்பது பற்றி ஆலோசனை
### தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி

(சென்னை)

விடுதலைப் புலிகளிடமிருந்து, தமது உயிருக்கு ஆபத்து நேரிடலாம் என்று மாநில அரசாங்கம் கருதுவதால், தமக்கு பாதுகாப்பு வசதியை அளிக்க மாநில அரசு உத்தேசித்திருப்பதாக தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி கூறியுள்ளார்.

தமது கட்சியிலுள்ள சக தொண்டர்களோடு இது பற்றி கலந்தாலோசனை செய்த பின்னர் அரசாங்கத்தின் இந்த யோசனையை ஏற்பதா என்பது பற்றி முடிவு செய்யப்படும் என்றும், அவர் சென்னையில் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இதனிடையேகாங்கிரஸ் கட்சியின் தமிழகத் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி, சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர் பாலசுப்பிரமணியம் ஆகியோரும் கருணாநிதிக்குபலத்த பாதுகாப்பு வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்திய இலங்கை ஆட்சி
இழிஞர்கள் இணைந்து கூடிப்
பின்னிய கொடிய சூழ்ச்சிப்
பிழம்பிலே சிக்கித் தங்கள்
இன்னுயிர் ஈந்த மேலோர்
ஈராறு வேங்கை வீரர்!
ஆறாவ தாண்டாம் இந்நாள்
அஞ்சலிக்குரிய பொன்நாள்!]

குன்றென நிமிர்ந்த தோளோர்
"குமரப்பா" "புலேந்தி அம்மான்"
வென்றிட வொண்ணா வீரம்
விளங்கிடும் "அப்துல் லா"வும்
நன்றெனக் களத்தே பாயும்
"நளன்" "ரகு" "பழனி" மற்றும்
நின்றெதிர் கொள்ளும் வீரம்
நிமிர்வுடை "கரன்" "மிரேசும்'

இணையிலாத் 'திரன்' 'ரெஜினோல்ட்'
'தவக்குமார்' "அன்பழகன்"
அணைந்திடாச் சுடரா னார்கள்
"ஆனந்தக்குமார்" னோடே
கணையெனப் பாயும் வீரம்
கனன்றிடும் விழியின் ஓரம்
இணையிலா ஈகை யாளர்
இவரை யார் மறத்தல்கூடும்?

சிங்களம் இவர்கள் பெயரைச்
செப்பிடக் கேட்டால் அஞ்சிப்
'பங்கருள்" பதுங்கும் தூரப்
பாய்ந்திடும்! தடு நடுங்கும்!
எங்களின் உள்ளத்துள்ளே
இருக்குமிம் மாவீரர்கள்
பொங்குமா தமிழீழத்தின்
பொற்குவை! என்றும் வாழ்வர்.

— நிலா தமிழின்தாசன்

## பன்னிரு மலைகள் சாய்ந்ததே

கூற்றுவர் கூடிக் கொண்டார்
கூடியே சதியைச் செய்தார் - தமிழ்
சாற்றினில் ஊறிய பன்னிரு
சாதனை வீரரைக் கொன்றார்
காற்றென வுலாவிக் காத்திட்ட
காவிய நாயகர் போயினர்
கூற்றுவர் நெஞ்சை எரித்திடும்- இவ்
வேங்கையர் சுடர் எழுந்து.

தலைவனின் பாசறை மீதிலே
தாயகம் காத்திடப் புகுந்தவர்
விலை மதித் திடாத முத்துக்கள் மீது
வீணர்கள் வலை விரித்தனர்
மலையென வுறுதி நெஞ்சிலே
மானமே வாழ்வென வெண்ணிடும்
தலை சிறந்த வேங்கைகள்
தணலெனத் தரை விழுந்தனர்.

பன்னிரு மலைகளாய் சாய்ந்தனர்
பகை கொட்டம் அடக்கிய வீரர்கள்
தன்னின மானம் காத்தவர்
தாயக மண்ணில் வீழ்ந்தனர்
கன்ன மிட வந்த இந்தியரை
கரிகாலன் வீரர்கள் கலைத்தனர் - எம்
மன்னவர் மறைவினால் எழுந்த போர்
மானப் புலி ஏறும் வரை தொடரும்.

— செந்தாளன்

# ஈழநாதம்

# தாக்குதல் நடவடிக்கைக்கு படையினருக்கு பூரண சுதந்திரம்

## பி. பி. ஸி. தெரிவிப்பு

(லண்டன்)

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா இராணுவத்தினால் என்ன செய்யப்படமுடியும் என்பதை காட்டும்படி இராணுவத்திற்கு பூரண சுதந்திரம் கொடுத்துள்ளார். தேர்தல் ஆண்டு அண்மித்துவரும் வேளையில் இராணுவத்தின் பலம் தெரியப்படுத்தப்பட்டால் அது ஜனாதிபதி விஜேதுங்காவிற்கு சாதகமாக அமையும் என அவரின் ஆலோசகர்கள் முடிவுசெய்துள்ளனர் போல் தெரிகிறது. இவ்வாறு பி. பி. ஸியின் முன்னாள் கொழும்பு செய்தியாளர் கிறிஸ் மொறிஸ் தனது செய்தி ஆய்வில் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா அரசின் புதிய தாக்குதல்கள் என்ற தலைப்பிலான அவரது செய்திக்கட்டுரையில் இராணுவ பலம் அதிகரிக்கப்படவேண்டும் என்ற இராணுவத்தின் கோரிக்கையை அரசு ஏற்றுள்ளது இப்போதைக்கு அரசு அரசியல் தீர்விலும் பார்க்க இராணுவ தீர்வையே நாடிநிற்கின்றது.

ஆனால் அரசபடைகள் புலிகளை வெல்லமுடியுமா என்பது சந்தேகம் தான். ஆனால் அரசு தனது நிபந்தனைகளின்படி புலிகளை பலவீனப்படுத்தவேண்டும் என்பது அரசின் நோக்கம் என்றும் கிறிஸ் மொறிஸ் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ்தேவி நடவடிக்கை பூர்த்தியடைந்ததாம்

(கொழும்பு)

வடபகுதியில் இராணுவம் ஆரம்பித்த பாரிய இராணுவ நடவடிக்கையான ஒபரேஷன் யாழ்தேவி பூர்த்தியாகி விட்டதாக சிறிலங்கா வானொலி நேற்றிரவு அறிவித்தது. கிளாலியில் பயணத்திற்கான சகல வசதிகளையும் படையினர் நிர்மூலம் ஆக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நான்கு நாள் மேற்கொண்ட இந்த இராணுவ நடவடிக்கையின் பின் பாரதூரமான எதிர்ப்புகள் ஏதும் இன்றி படையினர் தமது முன்னைய நிலைகளுக்கு தற்போது திரும்பிவிட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கமன தெரிவித்தார்.

# கறுக்காய் முள்ளிவெளியில் விவசாயிமீது ஹெலி தாக்கு

(தென்மராட்சி)

கறுக்காய் முள்ளிவெளியில் வயலில் வேலை செய்துகொண்டிருந்த விவசாயிகள் மீது உலங்குவானூர்தி ஒன்று கலிபர் தாக்குதலை நடாத்தியுள்ளது.

நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் இப்பகுதியில் இரு உழவு இயந்திரங்கள் மூலம் வயலை உழுதுகொண்டிருந்தவர்கள் மீதே இவ்வாறு உலங்குவானூர்தி பல தடவை சுற்றிச் சுற்றி 50 கலிபர் தாக்குதலை நடாத்தியது.

எனினும் அங்கிருந்த 6 விவசாயிகளும் காயம் எதுவுமின்றி தப்பிக்கொண்டனர். (86)

# வீடு பார்க்கச் சென்றவர் இராணுவச் சூட்டிற்கு பலி

(யாழ்ப்பாணம்)

கட்டுவன் பகுதியில் வீடு பார்க்க சென்ற இருவர் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தின் போது ஒருவர் அந்த இடத்திலேயே பலியானார். மற்றவர் படுகாயமடைந்தார்.

கட்டுவன் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து மல்லாகம் நீதிவான் இல்லத்தில் வசித்து வந்த செல்லமணி பிரபாகரன் (வயது 14) சின்னத்துரை சண்முகராசா (வயது 36) ஆகிய இருவரும் நேற்று பிற்பகல் 2. 30 மணியளவில் ...

என்பவர் அந்த இடத்திலேயே பலியானார். மற்றவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் (சி)

# பெண் காயம்

திருநெல்வேலிப் பகுதி மீது மண்டைதீவு சிறிலங்கா இராணுவத்தினர் நடாத்திய எறிகணைத் தாக்குதலின்போது பெண்மணி ஒருவர் காயமடைந்துள்ளார். இத் தாக்குதல் நேற்று பிற்பகல் 4. 45 மணியளவில் நடாத்தப்பட்...

# விநியோக நாள் மாற்றம்

கல்வி புனரமைப்புத் திட்டத்தின் கீழ் விஞ்ஞான உபகரணங்கள் விநியோகம் செய்யப்பட இருக்கும் பாடசாலைகளில் நாளை குறிப்பிடப்பட்ட பாடசாலைகட்கு அன்றைய தினம் வழங்கப்படமாட்டாது எனவும் அப்பாடசாலைகட்கு நாளை மறுதினம் வியாழக்கிழமை விநியோகம் செய்யப்படும்எனவும் பிரதேச கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

---

**டாங்கிப்**

காரா என்பவரும் மேலும் ஐந்து வீரர்களும் மேற்படி யுத்த நடவடிக்கையில் ஒரு கவச வாகன அணியாகச் செயற்பட்டனர். இவ் அணியினர் மேற்படி யுத்த நடவடிக்கையின்போது காணாமல் போய் விட்டனர். பின்னர் மேற்படி குழுவில் சென்ற ...

## வீரச்சாவு



**வீரவேங்கை சந்திரதாஸ்**

(முல்லைத்தீவு)

நேற்று முன்தினம் முல்லை மாவட்டத்தில் எதிர்பாராத விதமாக நடந்த வெடி விபத்தொன்றில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார். வீரச்சாவு அடைந்த வீரவேங்கை சந்திரதாஸ் (நாகர் சத்தியன் சித்தாண்டி மட்டக்களப்பு) என்பவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

# கோட்டரீதியாக நாளை ஆசிரியர் தின விழா

(நமது நிருபர்)

உலக ஆசிரியர் தின விழா யாழ். மாவட்டத்திலுள்ள சகல கோட்டங்களிலும் நாளை பிற்பகல் 2-30 மணிக்கு வெகு விமரிசையாக நடைபெறவுள்ளது. பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், பழைய மாணவர்கள், பெற்றோர் கலந்துகொள்ளும் இவ்விழாவில் பாடசாலை ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவுள்ளதுடன் விளக்கு சஞ்சிகை அறிமுகவுரையும் இடம்பெறவுள்ளது.

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட விழா மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

மருதனார்மடக் கல்விக் கோட்ட விழா பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் தலைமையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது

யாழ். கல்விக் கோட்ட விழா பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் தலைமையில் யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்திலும், தென்மராட்சிக் கல்விக் கோட்ட விழா பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. வீரபத்திரர் தலைமையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்திலும், வேலணைக் கல்வி கோட்ட விழா பிரதி. கல்விப்பணிப்பாளர் திரு. பொ சிவகுருநாதன் தலைமையில் ஊர்காவற்றுறை கொத்தணிப் பாடசாலை [சென் ஜோன். அக்கடமி]யிலும் வடமராட்சி கல்விக் கோட்ட விழா மெதடிஸ்த பெண்கள் உயர் கல்லூரியில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. செல்லத்துரை ...

---

**கைவிடப்பட்ட**

யிருப்பதையும் காணக்கூடியதாகவுள்ளது.

நேற்றைய தினம் கிளாலியிலிருந்து பின்வாங்கிச் சென்ற இராணுவத்தினர் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்ட தமது டாங்கிகளை அவ் இடத்திலேயே கைவிட்டுச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

**இடுகாடுபோல்**

சேர்த்து எரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இப் பகுதிகளில் இருந்த நூற்றுக் கணக்கான தென்னைமரங்கள்மற்றும் சில பாரிய மரங்கள் புல்டோசர் மூலம் பெயர்த் தெறியப்பட்டுள்ளன.

கிளாலி இறங்கு துறைப் ...

# கருணாநிதியின் அறிவிப்பு கோபாலசாமியை அகற்றும் சதி

## பி. பி. ஸி செய்தியாளர் தெரிவிப்பு

அடுத்த வாரத்தினுள் மு. கருணாநிதி கட்சியிலிருந்து கோபாலசாமியுடன் செஞ்சி இராமச்சந்திரன், வீரபாண்டி ஆறுமுகம், பொன் முத்துராமலிங்கம், நெல்லை லட்சுமணன் உட்பட அவருடையபல ஆதரவாளர்களையும் நீக்கிவிடுவார் என கோபாலசாமியின் ஆதரவாளர்ஒருவர் பி.பி ஸி.க்கு குறிப்பிட்டதாக பி.பி.ஸி சென்னை செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசு, அ. தி. மு. க, தி. மு க. என்பவை இணைந்து கோபாலசாமியை கட்சியிலிருந்து நீக்கிவிட உருவாக்கப்பட்ட சதியே கருணாநிதியின் புதிய அறிவிப்பு என கோபாலசாமி ஆதரவாளர்கள்கூறுகின்றனர். வயதான கருணாநிதியோ அரசியல் கவர்ச்சியற்ற அவர் மகன் மு. ஸ்ராலினோ தலைமை ஏற்கும் தி. மு. கவை விட கோபாலசாமி தலைமையிலான தி. மு. க. பெரிய கட்சியாக பெரியதோர் எதிரியாக உருமாறி விடும்என அ. தி.மு க. கருதுகிறது எனவும் பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது.

காங்கிரசின் முகவர் எனக் கூறப்படும் சுப்பிரமணியம் சுவாமி கருணாநிதி புலிகளின் ஆதரவாளரான வை. கோபாலசாமியை தி. மு. க விலிருந்து விலக்கினால் காங்கிரஸ்- தி. மு. க உறவு ஏற்படும் எனக் கூறிவந்துள்ளார். அண்மைய அ. தி. மு. க. வின் இடைத்தேர்தல் வெற்றிகளைக் கண்டகருணாநிதி அக்கட்சியை முறியடிக்க தி.மு.க காங்கிரஸ் கூட்டே அவசியம் என உணர்ந்தார். கோபாலசாமி தி. மு க விலிருக்கும் வரையில் காங்கிரஸ் -தி மு க உறவுக்கு வழியில்லை என காங்கிரஸ் கருதுகிறது எனவும் தெரிவித்தது.

---

**இராணுவம்**

தது விடுதலைப்புலிகள் வலது பக்கமாக இருந்து கடும் தாக்குதலைத் தொடுத்தவண்ணமிருந்தனர் இரண்டு பெரிய டாங்கிகளை இழந்தனர். இத்தாக்குதல்களால் இராணுவத்தினர் ஒரு டாங்கி முற்றாக அழிக்கப்பட்டதுமற்றைய டாங்கிக்கும் அதனுடன் சென்ற வீரர்களுக்கும் என்ன நடந்தது என்று தெரியவில்லை.

கொல்லப்பட்ட இராணுவத்தினரில் ஐம்பது சதவீதமானவர்கள் புலிகளால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார்கள்.

கடல்நீர் ஏரிக்கரைக்கும் புகையிரதப் பாதைக்கும் இடைப்பட்ட பகுதியூடாகவே இராணுவ அணி நகர்ந்து கொண்டிருந்தது இராணுவ உயர் அதிகாரிகள் போரிடும் படையினருக்கு அண்மித்து நின்று உற்சாகமூட்டியமையே படையினர் போரிட வாய்ப்பாக இருந்தது.

இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ணா தமது பரிவாரங்கள் சகிதம் காயமடைந்த படை வீரர்களை உடனடியாகவே ஆனையிறவு முகாமுக்குச் சென்று பார்வையிட்டார்.

சிறிலங்காவின் வான் படையினர் காயமடைந்தவர்களையும், இறந்தவர்களையும் எடுத்துச் செல்வதிலும், புதிய படையினரை களத்தில் இறக்குவதிலுமே முழுமையாக ஈடுபடவேண்டியிருந்தது. அத்துடன் படையினருக்குத் தேவையான ஆயுதங்களையும் விமானப்படையினர் விநியோகித்துக்கொண்டிருந்தனர் புதன்கிழமை முழுவதும் சிறிலங்காவின் விமானப்படையினருக்கு ஓய்வே இருக்கவில்லை. அன்று இரவு நித்திரை விழித்து விமானங்களை அங்குமிங்கும் ஓட்டிக்கொண்டிருந்தனர்.

மேற்படி யுத்த நடவடிக்கையின்போது சிறிலங்காவின் பக்க துறையிலிருந்து இராணுவத் தரப்பினருக்கு பூரண பலத்தை வழங்கிக்கொண்டிருந்தனர்.

விடுதலைப் புலிகளை பகிரங்க வெளிக்களப்போருக்கு அழைத்து வருவதே எமது நோக்கம் என்றும் இவ்வாறு தான் மேற்படி பிரதேசத்தை ...

# சங்கத்தானையில் ஷெல் வீச்சு

(தென்மராட்சி)

மண்டைதீவு சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து நேற்று மாலை ஏவப்பட்ட எறிகணைகள் சங்கத்தானை, கச்சாய் பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததினால் இருவீடுகள் சேதமடைந்தன.

நேற்று பிற்பகல் 4 30 மணியளவில் மேற்படி எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

எனினும் இப்பகுதியில் உள்ள மக்கள் பதுங்கு குழிகளுக்குள் சென்றுவிட்டதால் உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்பட்டன.

---

**தென்மராட்சி**

நிலைய வீதிப் பகுதியில் வீசப்பட்ட றொக்கட்டினால் பல வீடுகள் சேதமடைந்தன. அத்துடன் கடையொன்றும் சேதமடைந்தது. கடையில் இருந்தவரும் சிறுகாயமடைந்தார். வீதியால் சென்ற சிலரும் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்.

இதேவேளை நேற்று காலை விமானப்படைக்குச் சொந்தமான இரு புக்காரா விமானங்கள் கொடிகாமம் பிரதான வீதியில் குண்டு வீச்சு தாக்குதலை நடாத்தின. இதில் இரண்டு குண்டுகள் தென்னங்காணிகளுள் வீழ்ந்து வெடித்தன. மிருசுவில், நாவலடிப் பகுதியில் வீசப்பட்ட குண்டுகளினால் இரு வீடுகள் சேதமடைந்தன. இரு பாரிய குழிகளும் ஏற்பட்டன. (86), (சி)

வயலில் வேலை செய்து கொண்டிருந்த விவசாயிகள் மீது உலங்குவானூர்தி ஒன்று கலிபர் தாக்குதலை நடாத்தி யுள்ளது.

நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் இப்பகுதியில் டிருந்தவர்கள் மீதே இவ்வாறு உலங்குவானூர்தி பல தடவை சுற்றிச் சுற்றி 50 கலிபர் தாக் குதலை நடாத்தியது.

எனினும் அங்கிருந்த 6 விவ சாயிகளும் காயம் எதுவுமின்றி தப்பிக்கொண்டனர். (86)

## வீடு பார்க்கச் சென்றவர் இராணுவச் சூட்டிற்கு பலி

(யாழ்ப்பாணம்)

கட்டுவன் பகுதியில் வீடு பார்க்க சென்ற இருவர் மீது இராணுவத்தினர் மேற் கொண்ட துப்பாக்கிப் பிரயோக த்தின் போது ஒருவர் அந்த இடத்திலேயே பலியானார். மற்றவர் படுகாயமடைந்தார்.

கட்டுவன் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து மல்லாகம் நீதிவான் இல்லத்தில் வசித்து வந்த செல்வமணி பிரபாகரன் (வயது 14) சின்னத்துரை சண்முகராசா (வயது 36) ஆகிய இருவரும் நேற்று பகல் 2.30 மணியளவில் கட்டுவன் பகுதியில் உள்ள தமது வீட்டைப் பார்க்கச் சென்றசமயம் கட்டுவன் முனியப்பர் கோவிலடியில் இவர் கள் இருவர் மீதும் கட்டுவ னில் நிலைகொண்டுள்ள சிறி லங்கா இராணுவத்தினர் துப் பாக்கிப் பிரயோகம் செய்த தில் செல்வமணி பிரபாகரன் என்பவர் அந்த இடத்திலேயே பலியானார். மற்றவர் படு காயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் (சி)

### பெண் காயம்

திருநெல்வேலிப் பகுதி மீது மண்டைதீவு சிறிலங்கா இரா ணுவத்தினர் நடாத்திய எறி கணைத் தாக்குதலின்போது பெண்மணி ஒருவர் காயம டைந்துள்ளார். இத் தாக்கு தல் நேற்று பிற்பகல் 4.45 மணியளவில் நடாத்தப்பட் டது.

### பன்னிரு

தும் நினைவாக அமைக்கப் பட்டிருக்கும் நினைவுத் தூபக்கு இன்று மலர்மாலை கள் அணிவித்தும் மலர்கள் தூவியும் அஞ்சலி செலுத்தப் படும். [க] [யோ]

## விநியோக நாள் மாற்றம்

கல்வி புனரமைப்புத் திட் டத்தின் கீழ் விஞ்ஞான உப கரணங்கள் விநியோகம் செய் யப்பட இருக்கும் பாடசாலை களில் நாளை குறிப்பிடப் பட்ட பாடசாலைகட்கு அன் றைய தினம் வழங்கப்பட மாட்டாது எனவும் அப்பாட சாலைகட்கு நாளை மறுதினம் வியாழக்கிழமை விநியோகம் செய்யப்படும்எனவும் பிரதேச கல்விப் பணிப்பாளர் அறிவித் துள்ளார்.

### டாங்கிப்

காரா என்பவரும் மேலும் ஐந்து வீரர்களும் மேற்படி யுத்த நடவடிக்கையில் ஒரு கவச வாகன அணியாகச் செயற்பட்டனர். இவ் அணியி னர் மேற்படி யுத்த நடவடிக் கையின்போது காணாமல் போய் விட்டனர். பின்னர் மேற்படி குழுவில் சென்ற ஐந்து பெயரது சடலங்களை இராணுவத்தினர் மீட்ட பொழுதும் கப்டனின்நிலையை அறிய முடிய வில்லையாம்.

இதனையடுத்து மேற்படி கப்டனை புலிகள் பிடித்துச் சென்றிருக்கலாம் என்ற சந் தேகம் இராணுவ வட்டாரங் களில் நிலவி வருவதாக 'ராய் டர்' செய்தி ஸ்தாபனம் தெரி வித்தது.

கள், பழைய மாணவர்கள், பெற்றோர் கலந்து கொள்ளும் இவ்விழாவில் பாடசாலை ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட வுள்ளதுடன் விளக்கு சஞ்சிகை

### எவிடப்பட்ட

யிருப்பதையும் காணக்கூடிய தாகவுள்ளது.

நேற்றைய தினம் கிளாலியி லிருந்து பின்வாங்கிச் சென்ற இராணுவத்தினர் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்ட தமது டாங்கிகளை அவ் இடத் திலேயே கைவிட்டுச் சென் றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

### இறுகாடுபோல்

சோத்து எரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இப் பகுதிக ளில் இருந்த நூற்றுக் கணக் கானதென்னைமரங்கள்மற்றும் சில பாரிய மரங்கள் புல்டோ சர் மூலம் பெயர்த் தெறியப் பட்டுள்ளன.

கிளாலி இறங்குதுறைப் பகுதி புல்டோசர் மூலம் தரை மட்டமாக்கப்பட்டுள்ளது.

விமானப் படைகளின் எரி குண்டு வீச்சினாலும், குண்டு வீச்சுகளினாலும் பல மரங் கள் எரிந்த நிலையில் காணப் படுகின்றன. இதேவேளை பல பொது மக்களின் குடிசைகள் நேற்று மாலை வரை எரிந்து கொண்டிருந்ததைக்காணமுடி ந்தது. (ச),(86)

பெறவுள்ளது.

மருதனார்மடக் கல்விக் கோட்ட விழா பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவா னந்தன் தலைமையில் மருத னார்மடம் இராமநாதன் கல் லூரி மண்டபத்தில் நடை பெறவுள்ளது

யாழ். கல்விக் கோட்ட விழா பிரதிக் கல்விப் பணிப் பாளர் திரு. சி. வேலாயுதம் தலைமையில் யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண் டபத்திலும், தென்மராட்சிக் கல்விக் கோட்ட விழா பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. வீரபத்திரர் தலைமையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்திலும், வேலணைக் கல்வி கோட்ட விழா பிரதி. கல்விப்பணிப்பாளர் திரு. பொ சிவகுருநாதன் தலைமையில் ஊர்காவற்றுறை கொத்தணிப் பாடசாலை [சென் ஜோன். அக்கடமி]யிலும் வடமராட்சி கல்விக் கோட்ட விழா மெத டிஸ்த பெண்கள் உயர் கல்லூ ரியில் பிரதிக் கல்விப் பணிப் பாளர் திரு. செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள் ளன.

### வட மராட்சி

இவ் உலங்குவானூர்தி மேற் கொண்ட றொக்கட் குண்டு வீச்சுக்கு ஒன்பது பேர் காய மடைந்தனர். அப் பகுதியில் ஆறு வீடுகள் சேதமடைந்தன.

இத்தாக்குதலின்போது வல் வெட்டித்துறையைச் சேர்ந்த சி. சிவகணேசன் (வயது 19), பா. ஜெயராசா (வயது 20), கி. மோகனதாஸ் (வயது 21), க. செல்வகுமார் (வயது 37), ஜெ. தங்கக்கண்டு (வயது29), ம. மகேஸ்வரி (வயது 50), சிறிகணநாதன் (வயது 48), த. நித்தியகுமார் (வயது 19), கு. சிந்துஜா (வயது 03), ஆகியோரேகாயமடைந்தனர்.

உடுப்பிட்டியை நோக்கி வந்த உலங்குவானூர்திநான்கு றொக்கட் குண்டுகளை வீசிய தில் ஒரு குண்டு வெடிக்க வில்லை. மற்றைய குண்டுகள் பெண்கள் பாடசாலைமைதா னத்திலும், வெளியிடங்களி லும் விழுந்து வெடித்தன. இங்கு குறிப்பிடத்தக்க வகை யில் பாரிய சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை

வடமராட்சிக்கு வந்த உலங்கு வானூர்தி பத்துநிமிட நேரத்தில் உடுப்பிட்டி தொண்டமனாறு வல்வெட் டித்துறை பகுதி குடியிருப்பு மீது பத்தொன்பது குண்டு களை வீசி பல அனர்த்தங் களை ஏற்படுத்தியது குறிப் பிடத்தக்கது.

படையினர் போரிட வாய்ப் பாக இருந்தது.

இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ணா தமது பரி வாரங்கள் சகிதம் காயமடை ந்த படை வீரர்களை உடனடி யாகவே ஆனையிறவு முகா முக்குச் சென்று பார்வையிட் டார்.

சிறிலங்காவின் வான் படை யினர் காயமடைந்தவர்களை யும், இறந்தவர்களையும் எடு த்துச் செல்வதிலும், புதிய படையினரை களத்தில் இறக் குவதிலுமே முழுமையாக ஈடு படவேண்டியிருந்தது. அத் துடன் படையினருக்குத் தேவையான ஆயுதங்களை யும் விமானப்படையினர் விநி யோகித்துக்கொண்டிருந்தனர் புதன்கிழமை முழுவதும் சிறி லங்காவின் விமானப்படையின ருக்கு ஓய்வே இருக்கவில்லை. அன்று இரவு நித்திரை விழி த்து விமானங்களை அங்கு மிங்கும் ஓட்டிக்கொண்டிருந் தனர்.

மேற்படி யுத்த நடவடிக் கையின்போது சிறிலங்காவின் கடற்படையினர் செவ்வாய்க் கிழமை இரவு முதல் இடது பக்க துறையிலிருந்து இரா ணுவத் தரப்பினருக்கு பூரண பலத்தை வழங்கிக்கொண்டிரு ந்தனர்.

விடுதலைப் புலிகளை பகி ரங்க வெளிக்களப்போருக்கு அழைத்து வருவதே எமது நோக்கம் என்றும் இவ்வாறு தான் மேற்படி பிரதேசத்தை புலிகளிடமிருந்து விடுவிக்க முடியும் என்று பிரிகேடியர் நளின் அங்கமன 'ராய்ட்டர்' செய்தி முகவருக்குத் தெரி வித்துள்ளார்.

இராணுவப் படையணிகள் திறந்தவெளி நிலப்பரப்புக்கு முன்னேறிச் சென்றமையே படையினருக்கு ஏற்பட்ட பெரும் பாதிப்புகளுக்கான காரணங்களில் ஒன்றாக அமை ந்துள்ளது.

மேலும் விடுதலைப் புலி களின் காப்பிடமூடாகச் சென்றமையும் படையினரின் இழப்பிற்கு மற்றுமொரு கார ணமாகும் என்றும் பிரிகேடி யர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் கடையொன்றும் சேதமடைந்தது. கடையில் இருந்தவரும் சிறுகாயமடைந் தார். வீதியால் சென்ற சில ரும் சிறு காயங்களுக்கு உள் ளாகினர்.

இதேவேளை நேற்று காலை விமானப்படைக்குச் சொந்த மான இரு புக்காரா விமானங் கள் கொடிகாமம் பிரதான வீதியில் குண்டு வீச்சு தாக்கு தலை நடாத்தின. இதில் இரண்டு குண்டுகள் தென்னங் காணிகளுள் வீழ்ந்து வெடித் தன. மிருசுவில், நாவலடிப் பகுதியில் வீசப்பட்ட குண்டு களினால் இரு வீடுகள் சேத மடைந்தன. இரு பாரிய குழி களும் ஏற்பட்டன. (86),(சி)


## ஆசிரியர் தின அழைப்பிதழ்

எமது கல்லூரி ஆசிரியர்களை இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் வைத்து நாளை புதன்கிழமை காலை 9 மணியளவில் கௌரவிக்கவுள்ளோம்.

இதில் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாண வர்கள் மற்றும் நலன்விரும்பிகளையும் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

(6220) மகாஜனா கல்லூரி மாணவர்கள்

## கணக்காளர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் வர்த்தக நிலையம் ஒன்றிற்கு கணக்காளர் தேவை

தகைமைகள்: இதற்கு முன்னர் தனியார் நிறுவனத் தில் பத்து ஆண்டுகால அனுபவம் நிறைந்தவராகவும், வயதெல்லை 40 க்கும் 50க்கும் உட்பட்டவராகவும் இருத்தல் விரும்பத்தக்கது.

20 - 10 - 1993 க்கு முன்னர் அனுபவச் சான்றின் போட்டோ பிரதிகளுடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 202

மே/பா ஈழநாதம்

81, மகேந்திரா வீதி,

யாழ்ப்பாணம்

(6219)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


### யாழ். வன்னி

கையளிப்போர் அதற்கென உள்ள படிவங்களை சரியான முறையில் பூர்த்தி செய்து அலுவலக நேரத்தில் ஒப்ப டைக்கலாம்.

**சலுகை அடிப்படையிலான தகவல்கள்**

பாரதூரமான நோய்வாய்ப் பட்டிருக்கும் செய்திகளும், மரண அறிவித்தற் செய்தி களும் சலுகை அடிப்படையி லான செய்திகளாக கொள்ளப் படும். குறிப்பிட்ட சிற்றூர் பொறுப்பாளர் அல்லதுகிராம சேவகர் அல்லதுவைத்திய அதி காரியின் உறுதிப்படுத்தப் பட்ட கடிதத்துடன் வரும் செய்திகள் மாத்திரமே மேற் குறிப்பிட்ட சலுகை அடிப் படையிலான தகவல்களாக ஏற்றுக்கொள்ளப்படும்.

15ற்கு மேற்படாத சொற் களுக்கு ரூபா 15 ம் மேலதிக மான சொற்களுக்கு ரூபா 2-ம் அறவிடப்படும்.

குறிப்பு:-

பாரதூரமான நோய்வாய்ப் பட்டிருக்கும் தகவல் அறிவித் தற்செய்திகளையே சாதாரண தகவல்களாக ஏற்றுக்கொள்ள இருப்பினும் மேற்குறிப்பிட் டோரின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் பெற்றிருத்தல் வேண் டும்.

**வியாபாரத் தகவல்:-**

நமது வியாபார நோக்கத் திற்கான தகவல்கள் இக் குறிப் பிட்ட வகையில் அடங்கும்.

முதற் பத்து சொற்களுக்கும் ரூபா 200/-மேலதிக ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 15-ம் கட் டணமாக அறவிடப்படும்.

**வழமையான தகவல்கள்**

மேற்குறிப்பிட்ட சலுகை அடிப்படைத் தகவலிலும் வியாபாரத் தகவலிலும் உள் ளடங்காத மற்றைய எல்லாத் தகவல்களும் வழமையான தக வல்களாக கொள்ளப்படும்.

முதற் பத்து வரையிலான சொற்களுக்கு ரூபா 100-ம் மேலதிகமான ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 5-ம் கட் டணமாக அறவிடப்படும்.

**விநியோக வகைகள்**

சாதாரண விநியோகம்

தகவல் பொறுப்பேற்கப் படும் நேரத்திலிருந்து 72மணி நேர இடைவெளிக்குள் அவ் வப் பகுதித் தபால் ஊழியர் களின் ஒத்துழைப்புடன் உறு திப்படுத்தப்பட்ட நிலையில் கையளிக்கப்படும். மேற்குறிப் பிடப்பட்டுள்ள கட்டணங்கள் சாதாரண விநியோகத்திற்கே உரியனவாகும்.

**விரைவு விநியோகம்**

இது தகவல் பொறுப்பேற் கப்படும் நேரத்திலிருந்து 24 மணி நேர இடைவெளியில் ''நேரடியாக'' விநியோ கிக்கப்படும். விரைவு விநியோ கத்திற்காகச் சாதாரண கட் டணத்துடன் மேலதிகமாக 500 ரூபா அறவிடப்படும்.

**குறிப்பு:-**

1. தெளிவில்லாத முகவரிகள், தகவல் விபரங்கள் என்பவற் றால் ஏற்படும் தாமதங்கள், விளக்கமின்மை என்பவற்றால் விநியோக சேவையினர் பொறுப்பேற்க முடியாது என் பதுடன் குறிப்பிட்ட காரணங் களிற்காக தகவல் கையேற்கப் படுவதிலிருந்தும் மறுக்கப்பட லாம்.

2. வன்னிப்பகுதி முகவரி இல் லாதவர்களின் வசதிக்காக(பய ணிகள்) சோதனை நிலைய கருமபீடத்தையும் கிளிநொச்சி யில் அலுவலகத்தையும் முக வரியாக அமைத்து தகவலை அனுப்பலாம். உரியவர் தன்னை உரிய ஆவணத்தினூ டாக அடையாளம் காட்டிக் கோரும்பட்சத்தில் தகவல் வழங்கப்படும்.

3. கட்டணங்கள் யாவும் பண மாகவே செலுத்த வேண்டும்.

4. விரைவு விநியோகத்திற்கா கத் தகவல்கள் ஒப்படைப்ப வர்கள் தாம் விரும்பினால் பதில் தகவல்களுக்காக கட் டணத்தையும் செலுத்தினால் தகவலை உரியவரிடம் ஒப்ப டைக்கும்போதே பதில்தகவல் பெற்று அனுப்பப்படும்.

5. தகவல் விநியோகப் படிவத் தினை ரூபா 1 கொடுத்து செய லகங்களில் பெற்றுக் கொள்ள லாம்.

6. எல்லாத் தகவல்களும் தமிழ் மொழியில் மட்டுமே பெற்றுக் கொள்ளப்படும்.

7. தகவலைக் கொடுப்போர் அடையாள அட்டை அல்லது குடும்ப அட்டை காட்டித்தான் அடையாளங்களை உறுதிப்ப டுத்த வேண்டும்.

பொதுமக்கள் யாவரும் இச் சேவையினைப் பயன்படுத்திப் பயன் பெறும் நோக்குடன் இச் செய்தியைப் போக்குவரத் துக் கண்காணிப்புப் பிரிவு அறி யத்தருகின்றது.


## மரண அறிவித்தல்

அருட் சகோ.

**பேதுருப்பிள்ளை யோண்பிள்ளை (O.M.I)**

அருட் சகோதரர் பேதுருப்பிள்ளை யோண்பிள்ளை அ ம.தி. அவர்கள் 04-10-1993 திங்கட்கிழமை ''அமல உற்பவ'' இல்லத்தில் காலமாகி விட்டார். அவர்களது பூதவுடல் கொழும்புத்துறை புனித சூசையப்பர் ஆலயத் தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கிறது.

இன்று (05-10 1993) செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். ஆயர் தலைமையில் இரங்கற் திருப்பலி நிறைவேற்றப்பட்டு அவர்களது பூதவுடல் மரியன்னை பேராலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

**''இறைவனுக்குள் இளைப்பாறுவாராக''**

அருட்திரு. சா. ம. செல்வரட்ணம் அ.ம.தி.
அமல மரித் தியாகிகள்

''தொடர்பகம்''
657, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (6216)